http://www.maalaimalar.com Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 9-10-2024 (புதன்கிழமை) 10 பக்கம் ₹ 5 ★★★ | மலர் 47 இதழ் 299

COIMBATORE 9-10-2024 (WEDNESDAY) 10 PAGES ₹ 5 | VOL: 47 ISSUE: 299



## கோவை ரோட்டரி சங்கம் சார்பில்

# டாக்டர் விஸ்வநாத்துக்கு விருது

கோவை, அக்.9—

பாலக்காட்டில் வறண்டு கிடந்த 20 ஏக்கர் நிலத்தை இயற்கைசார் தொழிநுட்பம் மூலம் பல்லுயிர் வேளாண் வனப்பண்ணையாக மாற்றிய கேரளாவின் அத்தாச்சி குழுமத்தை சேர்ந்த டாக்டர் விஸ்வநாத்துக்கு 'அவார்ட் ஆப் எக்செலன்ஸ்' விருது வழங்கப்பட்டது.

இந்த விருதை கோவை ரோட்டரி சங்க மாவட்ட ஆளுனர் என்.சுந்தரவடிவேலு வழங்கி கவுரவித்தார். பின்னர் அவர் பேசுகையில், "டாக்டர் விஸ்வநாத் தொழிலுக்கு அப்பாற்பட்டு எடுத்துள்ள இந்த முயற்சி மண்ணின் ஆற்றலை மீண்டும் தூண்டி, தரிசு நிலத்தை பல்லுயிர் காடாக மாற்றி உள்ளது. மேலும் இயற்கையோடு இணக்கமான வாழ்வு மற்றும் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தை தணிக்க வித்திட்டு உள்ளது என பாராட்டினார்.